நாள். 24.07.2026

அசல் வழக்கு எண்.198/2009

பி.வா.சா. 1 ஷேக் முகைதீன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி..

வாதிகளின் வீட்டிற்கு கீழ்பக்கம் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான். கீழ்பக்கத்தில் உள்ள என்னுடைய வீட்டை எத்தனை ஆவணங்களின் அடிப்படையில் வாங்கியுள்ளேன் என்றால் என் தந்தை தான் கிரையம் வாங்கினார், அவருக்கு தான் தெரியும். என்னுடைய வீடு 3 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக நான் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு கீழ்பக்கம் உள்ள என்னுடைய வீட்டின் அளவுகள் மற்றும் யார் யாரிடமிருந்து கிரையம் பெற்றது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும் ஞாபகம் இல்லை.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 6 ஆவணம் அப்துலா ராவுத்தர் மீராபிள்ளை ராவுத்தருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் எனக்கு தெரியாது. ஆவணம் 1908 ம் ஆண்டு ஆவணம் என்பதால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணத்தை படித்து பார்த்து கிரையம் கொடுத்தவருக்கு எதன் அடிப்படையில் உரிமை இருந்து கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என படித்து சொல்ல முடியுமா என்றால் தற்போது சொல்ல இயலாது, பொறுமையாக படித்து பார்த்தால் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் 2 ம் பக்கத்தில் கடைசி வரியிலும் 3ம் பக்கத்தில் முதல் வரியிலும் எனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, பூர்விக சொத்தமாயும் பாகப்பாத்தியதையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணத்தில் முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் முழுவதுமாக படித்து பார்த்தால் தான் சொல்ல முடியும். நான் ஏற்கனவே ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன் என்றாலும் முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிந்தும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் எவ்வளவு தச்சு முழம்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிழமேல் வடதலை 8 ½ தென்வடல் 16 என குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 7 ஆவணத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னால் படிக்க முடியவில்லை. பி.வா.சா.ஆ 7 ஆவணத்தில் எழுதிக்கொடுப்பவர் முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் படித்து பார்த்தால் தான் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 8 ஆவணத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னால் படிக்க முடியவில்லை. பி.வா.சா.ஆ 6,7,8 ஆவணங்களில் முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என தெரிந்தும் நான் படிக்க முடியவில்லை என சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அதை போல் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளும் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக படிக்க முடியவில்லை என சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அளவுகள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல, ஆவணங்களை சமர்பித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது வாதியின் வீடு என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் தாக்கல் செய்துள்ள ஆவண எண் 35/1893 க்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல, அது பாகப்பிரிவினை பத்திரம், பிரதிவாதிகளின் மூலபத்திரம் அது தான். மேற்படி ஆவணம் மூலபத்திரமாக இருந்திருந்தால் வாதி மற்றும் பிரதிவாதிகள் வாங்கிய கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றாலும் சம்மந்தம் இல்லாததால் தான் மேற்படி ஆவணம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல, அது தான் மூலஆவணம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யாததற்கு காரணம் சொல்லவில்லை என்றால் அசல் ஆவணம் கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் தாக்கல் செய்வேன்.

அசல் ஆவணங்களில் எழுத்துக்கள் தெளிவாக இருக்கும் என்பதால் தான் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால்

சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 2 ம் தபசில் சொத்தை பொறுத்து நான் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நான் சட்டப்படி கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும் சரியல்ல.